பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

தமிழகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையால் 20.06.2026 முதல் 26.06.2026 வரை மேற்கொள்ளப்பட்ட 4 பொறிவைப்பு நடவடிக்கைகள்

1. 22.06.2026 அன்று திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் பெண் குழந்தை நலத்திட்ட உதவி பெற திருமதி.உஷாராணி, சமூக நல விரிவாக்க அலுவலர், திருமதி.ஜெயலட்சுமி, உதவியாளர் மற்றும் திருமதி.வளர்மதி, உதவியாளர், திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோர்கள் ரூ.1,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டனர்.

2. 22.06.2026 அன்று சென்னையில் மின்வாரிய தலைமை பொறியாளர் அலுவலகத்தில் பணியிடை நீக்கம் செய்த அலுவலருக்கு மீண்டும் பணியிட உத்தரவு வழங்க திரு.பாலாஜி, ஓழங்கு நடவடிக்கை பிரிவு உதவியாளர், தமிழ்நாடு மின் வாரிய அலுவலக தலைமையகம், அண்ணாசாலை, சென்னை மாவட்டம் அவர்கள் ரூ.50,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

3. 23.06.2026 அன்று திருச்சி மாவட்டத்தில் வீட்டுவரியை மதிப்பீடு செய்வதற்காக திரு.கே.சி.மாரியப்பன், ஊராட்சி செயலாளர், திருவெறும்பூர் ஒன்றியம், பனையக்குறிச்சி கிராமம், திருச்சி மாவட்டம் அவர்கள் ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

4. 23.06.2026 அன்று வேலூர் மாவட்டத்தில் உடற்தகுதிச் சான்றிதழ் வழங்க மருத்துவர் வெங்கடலட்சுமி, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிகுப்பம், காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்கள் ரூ.900/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

ஊழல் வழக்கில் 20.06.2026 முதல் 26.06.2026 வரை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனைகள்

திருச்சி ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்புநீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் திரு.தங்கவேல், கிராம நிர்வாக அதிகாரி, இடப்பட்டி கிராமம், மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், மொத்தம் அபராதம் ரூ.4,000/- விதித்தும், திரு.வெள்ளைச்சாமி, கிராம அலுவலர், இடப்பட்டி கிராமம், மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம் அவர்களுக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், மொத்தம் ரூ.2,000/- விதித்து 25.06.2026 அன்று தீர்ப்பளித்தது

அரசு அலுவலகங்களில் நடைபெற்ற திடீர் சோதனைகள்

1. கடந்த 22.06.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மதுரை பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து வட்டார வளர்ச்சி அலுவலகம், சேடப்பட்டி பஞ்சாயத்து யூனியன், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.76,000/- கைப்பற்றப்பட்டது மற்றும் G Pay செயலி மூலமாக கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.20,46,900/- வரவு வைக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2. தென்காசி மாவட்டம், புளியரை போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் கடந்த 25.06.2026ம் தேதி தென்காசி பிரிவு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,95,150/- கைப்பற்றப்பட்டது.